ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/16 - 2023 පෙබරවාරි මස 13 වැනි සඳුදා - 2023.02.13

2319/16 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மாகாணத்தில், வவுனியா மாவட்டத்தில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில், தச்சன்குளம் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.12.19 ஆந் திகதிய வ. 345 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு 1 இனால் காட்டப்பட்ட 0.4047 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணியின் விபரங்கள் :

**01. துண்டு இல. 1 - காணியின் பெயர்: தச்சன் குளம்; நோக்கம்: 211 ஆவது பிரிகேட் இராணுவத் தலைமையகம் நிர்மாணிப்பதற்காக; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: மாசிலாமணி சண்முக தாசன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.4047 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 75 PPS 155; கிழக்கு : துண்டு இல. 69 PPS 155; தெற்கு : துண்டு இலக்கங்கள் 69, 70 PPS 155; மேற்கு : துண்டு இலக்கங்கள் 70, 75 PPS 155.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்

1A - G 38842 — 10 (2023/02)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023.03.27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023.03.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என். கமலதாசன்,
பிரதேச செயலாளர் ,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2023, பெப்புருவரி 07.

EOG 02 - 0134